# இலங்கை தேசிய புலமை சொத்து அலுவலகம்

## 2014 தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி செயற்றிட்டம்

2014 தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி செயற்றிட்டம் மற்றும் அதனோடு இணைந்தவாறாக நடாத்தப்படும் புலமை சொத்து தொடர்பான அகில இலங்கை ரீதியான கட்டுரைப் போட்டி மற்றும் தேசிய புலமை சொத்து அலுவலகத்திற்கான இலட்சனை ஒன்றினை வடிவமைத்தல் போட்டிகளுக்காக பங்குபற்ற விருப்பமுடையவர்களிடமிருந்து விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன.

1. கட்டுரை போட்டி (பாடசாலை மாணவர்களுக்கானது)

பாடசாலை மாணவர்களுக்கிடையில் புலமை சொத்து தொடர்பான விழிப்பணர்வினை வளர்ப்பதனை நோக்காக கொண்டு "இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக புலமை சொத்துரிமையை பாதுகாப்பதன் முக்கியத்துவம்" எனும் தலைப்பின் கீழ் இப்போட்டி நடைபெறும்.

மேற்கூறப்பட்ட தலைப்பின் கீழ் புலமை சொத்துக்களாக கொள்ளப்படும் புத்தாக்கங்களுக்கான ஆக்கவுரிமைகள், வியாபாரச் சின்னங்கள், கைத்தொழில் வடிவமைப்புகள், பதிப்புரிமையும் அது தொடர்பான உரிமைகளும் போன்ற விடயங்கள் தொடர்பாக கவனத்தில் கொண்டு புலமை சொத்துரிமை பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் ஊடாக நாட்டின் அபிவிருத்திக்கு கிடைக்கும் பங்களிப்பு தொடர்பாக 1000 சொற்களுக்கு குறையாத கட்டுரையொன்றினை முன்வைக்க வேண்டும். புலமை சொத்து என்பது மனிதன் ஒருவன் தனது மனத்தினை ஒருங்கிணைத்து செய்கின்ற எந்தவொரு படைப்பும் என பொருட்படும். கலைப் படைப்பு, தொழில்நுட்ப படைப்பு, வியாபாரச் சின்னங்கள், கைத்தொழில் வடிவமைப்புகள என்பன இதனுள் உள்ளடக்கப்படும்.

I. தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய எந்தவொரு மொழி மூலத்தினூடாகவும் போட்டியில் பங்குபற்ற முடியும். மூன்று மொழி மூலங்களுக்கும் வெவ்வேறாக வெற்றியாளர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

   1ஆம் பரிசு - ரூ. 25,000 மற்றும் சான்றிதழ்
   2ஆம் பரிசு - ரூ. 15,000 மற்றும் சான்றிதழ்
   3ஆம் பரிசு - ரூ. 10,000 மற்றும் சான்றிதழ்

II. முழுப்பெயர், பிறந்ததினம், மொழிமூலம், கல்வி கற்கும் பாடசாலை, தரம், சுயமான நிர்மாணம் என அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் என்பனவற்றுடனான விண்ணப்பப்படிவத்துடன் கட்டுரையானது 2014.01.30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.

III. கடித உறையின் இடது மேல் மூலையில் “புலமை சொத்து தொடர்பான அகில இலங்கை ரீதியான கட்டுரைப் போட்டி” எனவும் மற்றும் மொழிமூலமும் குறிப்பிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும்.

IV. வெற்றியாளர்களுக்கான பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கல் என்பன 2014 தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் வழங்கப்படும்.

- ❖ தகவல்களை தேடிப் பெற்றுக்கொள்ள மற்றும் புலமை சொத்து சட்டம் தொடர்பாக அறிந்து கொள்ள இணையத்தினை பயன்படுத்த விண்ணப்பதாரிகள் அறிவுறுத்தப்படுகின்றனர். (எமது வெப்தளம் - �றறற.ளெிழ.பழஎ.டம)

- ❖ வேறு ஆக்கங்களை பிரதிபண்ணல், அப்படியே பயன்படுத்தல் மற்றும் வேறு ஆக்கங்களின் தகவல்களை பாவித்தல் போட்டிக்கான தகுதியிழத்தலுக்கு காரணமாகும்.

2. <u>தேசிய புலமை சொத்து அலுவலகத்திற்காக இலட்சனை ஒன்றினை வடிவமைத்தல் (திறந்த)</u>

I. உங்கள் ஆக்கம் 10உ‌அ ஒ 10உ‌அ அளவாக அமைந்திருக்க வேண்டியதோடு தெளிவான வடிவமைப்புடையதாக இருத்தல் வேண்டும்

II. அரச நிறுவனத்திற்கு பொருத்தமான வகையில் அமைய வேண்டும்.

III. ஆக்கியோனின் சுய விபரக் கோவையுடனான விண்ணப்பப்படிவத்தோடு தமது சொந்த வடிவமைப்பு என்பதற்கான தமது அத்தாட்சி பத்திரத்தினையும் இணைத்து 2014.01.30 ஆம் திகதிக்கு முன்னர் ஆக்கங்களை அனுப்ப வைக்கவும். கடித உறையின் இடது மேல் மூலையில் “புலமை சொத்து அலுவலகத்திற்காக இலட்சனை ஒன்றினை வடிவமைத்தல்” என குறிப்பிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும்.

IV. தெரிவு செய்யப்பட்ட பின் குறித்த ஆக்கம் தொடர்பான அனைத்து உரிமைகளும் புலமை சொத்து அலுவலகத்தின் வசமாகும்.

V. தெரிவு செய்யப்பட்ட ஆக்கத்திற்கு ரூ 25,000 பெறுமதியான பணப்பரிசு வழங்கப்படும். பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கல் என்பன 2014 தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனுப்பப்பட வேண்டிய விலாசம்

ஆணையாளர் நாயகம்
தேசிய புலமை சொத்து அலுவலகம்
400, “சமாகம் மெதுர”
டி ஆர் விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10.